பொரலஸ்கமுவ நகர சபை – 2024

--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொரலஸ்கமுவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவுடன் திருத்தி வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் பொரலஸ்கமுவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் மேற்கொள்ளப்பட்ட உள்ளடங்கள்களுக்காக தொடர்புகளின் அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்பு	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 12 களஞ்சிய பொருட்களின் இருப்பு மீதிகள் நியமத்தின் 5 ஆம் அத்தியாயத்தின் 5.11 ஆம் பந்தியின் படி சரியான விகிதங்களில் மதிப்பிட்டிராமை யால் களஞ்சிய இருப்பு ரூபா 406,723 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் போது வேலை ஆரம்பிக்கப்படாத ஒரு தொழிலின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில், டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பணிகள் நிறைவடையாத இரண்டு தொழில்களின் நிறைவடைந்த பெறுமதியின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 7,286,719 ஆகும். இத் தொகை மீளாய்வாண்டில் வீதி, பாலங்கள் மற்றும் மதகுகளின் மூலதனமய மாக்கல் காரணமாக, ஆதன, இயந்திர உபகரணங்கள் ரூபா 7,286,719 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(ஆ)	கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி, வடிகால் நிர்மாணிப்புகளின் மொத்த மூலதனக் கிரயமான ரூபா 107,789,722 ஆன பெறுமதி ரூபா 111,478,374 ஆக மூலதனமாக்கப் பட்டிருந்ததன் காரணமாக குறித்த கால்வாய்கள் மற்றும் வடிகால் கணக்குகள் ரூபா 3,688,652 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப் பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் போது மேல் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டிடங்களுக்கான மீண்டெழும் செலவினமாகப் பெறப்பட்டிருந்த ரூபா 609,576 மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக மாகாண சபை மூலதன மானியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீண்டெழும் செலவினம் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(ஈ)	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,196,310 மற்றும் ரூபா 925,497 செலவில் நிறைவேற்றப்பட்ட கட்டிடங்களின் மொத்த மதிப்பான ரூபா 2,121,807 தொகை மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது பணிகள் முடிக்கப்பட்டிராத சபை நிதியிலிருந்து ஏற்கப்பட்ட ரூபா 290,239 கிரயமான தொழில் பெறுமதி நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக கட்டிடமாக மூலதனமாக்கப் பட்டிருந்தது.	மாகாண சபையின் இறுதிக் கணக்குகளுக்காக நடத்தப்பட்ட செயலமர்வின் போது, பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிக நிறுவனங்களுக்காக	நடைமுறை வேலைகள் மற்றும் கட்டிடங்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

			மாத்திரமே நடைமுறை வேலையாகக் கணக்கிடப்படுவதாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக.

1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	04 கணக்கு விடயங்களுடன் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படியான மொத்தம் ரூபா 75,840,699 ஆன போதிலும், வருமானப் பொழிப்பு/ வருமானச் சேகரிப்புத் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளின் படி, குறித்த மீதி ரூபா 78,591,966 ஆக இருந்தமையால் ரூபா 2,751,267 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	தெளிவான பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்க்கப்பட வேண்டும்.
(ii)	03 கணக்கு விடயங்களுடன் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படியான மொத்தம் ரூபா 30,186,830 என்ற போதிலும், வருமானப் பொழிப்பு/ வருமானச் சேகரிப்புத் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளின் படி, குறித்த மீதி ரூபா 26,806,746, ஆக இருந்தமையால் ரூபா 3,380,084 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	இது கணினி அமைப்பின் மூலம் ஏற்பட்ட தவறாகும். அதை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	வேறுபாட்டைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வீதவரி கடன்பட்டோர் விடயத்திற்கு உரித்தான மீதிக்கும் இதற்கு உரித்தான பட்டோலையில் காண்பிக்கப்படும் மீதிக்கும் இடையே ரூபா 4,087,103 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாட்டைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 115,007,717 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 51,899,403 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 128,556,196 ஆன மீதி இருந்த போதிலும் அன்றாட செலவுகளை ஈடுகட்ட போதுமான நிதியைத் தக்கவைத்துக்கொண்டு மீதமுள்ள நிதியை குறுகிய அல்லது நீண்ட கால முதலீடுகளில் முதலீடு செய்வதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	நகர சபைக்குச் சொந்தமான புதிய அலுவலகக் கட்டிடத்தின் எதிர்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 50 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது, எனவே குறுகிய அல்லது நீண்ட கால முதலீட்டு வழிகளில் முதலீடு செய்ய முடியவில்லை.	கையில் உள்ள பணத்தொகையை ஏற்ற வகையில் குறுகிய அல்லது நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானத்தை ஈட்டுவதில் சபை கவனம் செலுத்த வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

		2024				2023			
	வருமான முன்னேற்றம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா . ‘000	ரூபா . ‘000	ரூபா . ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
(i)	வீதவரியும் வரியும்	60,000	72,751	63,027	34,807	28,000	28,020	30,017	25,083
(ii)	வாடகை	990	990	1,190	171	990	990	913	245
(iii)	அனுமதிப்பத்திரக் கட்டணம்	230	304	304	-	750	307	307	-
(iv)	ஏனைய வருமானம்	1,210	1,614	1,614	-	1,070	2,219	2,219	-
	மொத்தம்	62,430	75,659	66,135	34,978	30,810	31,536	33,456	25,328

2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்

(அ) வீதவரியும் வரியும்

(i)	மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரியும் வரி வருமானத் தொகையான ரூபா 72,751,191 ஆனதுடன் இதில் ரூபா 21,548,437 அதாவது 30 சதவீதத்தை அறவிடப்படுவதற்கு சபை தவறியிருந்தது.	பட்டியலிடப்பட்ட வருமானத்தின் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதை அடுத்து தற்போது பற்றாக்குறையில் 23 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது.	நிலுவையான வீதவரி பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	முன்னைய ஆண்டின் இறுதியில் வீதவரி மற்றும் வரி கடன்பட்டோரின் மீதி ரூபா 25,083,127 ஆனதுடன் இதில் ரூபா 13,258,474 அதாவது 53 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.	இதுவரையில் நிலுவையில் 23 சதவீதமானவை அறவிடப்பட்டுள்ளதாக.	நிலுவையான வீதவரி பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள் மற்றும் பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர சபையால் பராமரிக்கப்படும் இணைந்த கணக்கிலிருந்து ரூபா 24,000,000 பெறப்பட்டு 03 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக 2021 பிப்ரவரி 05, அன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இதில், ரூபா. 14,000,000 கிரயமான 02 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர சபையால் இணைந்து பராமரிக்கப்படும் பணத்தில் மாகாண சபையின் பொறியியல் பிரிவால் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக.	அபிவிருத்திச் செயற் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) வேலை ஆரம்பிக்கப்பட்டிராத செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கவனிஸ் எதிரிசூரிய வீதியில் ''பிங்கிலிந்த'' அருகில் இருந்து நீர் வழிந்தோடுவதை முறைப்படுத்துவதற்கு ரூபா 1,400,000 கிரய மதிப்பீட்டில் விளையாட்டுக் கழகமொன்றுடன் 2024 திசெம்பர் 04 ஆம் திகதி உடன்படிக்கை யிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2025 பெபிரவரி 27 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை	அபிவிருத்திச் செயற் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	மீளாய்வாண்டில், ரூபா 15,654,465 செலவில் 4234 தொன் உக்கும் குப்பைகளும் 5219 தொன் உக்காத குப்பைகளும் கரதியானா குப்பைக் கிடங்கில் அகற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உக்காத 3465 தொன் குப்பைகள் 66 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.	கலவை குப்பைகளில் பெரும்பாலானவை அகற்றப்படுவதனாலாகும்.	பிரிக்கப்பட்ட குப்பைகள் சேகரிக்கப்பட வேண்டியதுடன உக்காத குப்பை முகாமைத்துவத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	உக்கும் குப்பைகளை விற்பனை செய்வதற்காகவோ அல்லது சேதன உரச் செயற்திட்டத்தின் மூலம் உரம் உற்பத்தி செய்வதன் மூலமோ அல்லது உக்காத குப்பையை முகாமைத்துவம் செய்யப்படு வதற்கோ நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குப்பைகளை அகற்றுவதற்காக மேற்கொள்ளப் பட்ட செலவைக் குறைப்பதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	பொரலஸ்கமுவ நகர சபையிடம் சேதன உரம் தயாரிப்பதற்கு ஏற்ற காணி ஒன்று இல்லை, மேலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குப்பை சந்தை மற்றும் சிரமதானம் நடத்தப்படுவதுடன் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் மாதத்திற்கு ஏறத்தாழ ரூபா 15,000 அளவிலான வருமானத்தை சபை ஈட்டுவதற்கான செயல்முறை இதுவரையிலும் நடைபெற்று வருகின்றது.	குப்பைகளை அகற்றுவதற்கு ஏற்படும் செலவுகளைக் குறைப்பதில் சபை கவனம் செலுத்த வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தொழில்துறை அட்டவணையின் படி வீதி, வடிகால் மற்றும் கட்டிட பழுதுபார்ப்புகளுக்கான செலவு ரூபா 12,219,104 ஆக இருந்த போதிலும், வருமானக் கூற்றில் குறித்த செலவு ரூபா 11,535,580 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 693,596 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் இது இனங்காணப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	வேறுபாட்டைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 டிசம்பர் 31, இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மீதியில் 2017 ஆம் 2023 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் முறையே ரூபா 100,057 தொகையும் ரூபா 471,500 தொகையான மீதியும் தீர்க்கப்படாது காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	கடன்கொடுத்தோர் மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	காசோலை வழங்கும் பதிவேட்டில், காசோலை இலக்கம் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட பணம் பெறுனருக்கு காசோலை ஒப்படைக்கப்பட்டதாக எந்த தகவலும் வழங்கப்பட்டிராத மொத்தம் ரூபா 1,390,523 பெறுமதியான 06 காசோலைகள் காணப்பட்டன.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	காசோலை ஒப்படைக்கப்பட்டதற்கான எழுத்து மூல சான்றுகளைப் பெற வேண்டும்.
(ஈ)	சிறிய அளவிலான மாசுபடுத்தும் செயல்முறைகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிகளை வழங்குவது குறித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல் களின் 3.3 (அ) மற்றும் (ஆ) அறிவுறுத்தல்களின் படி ஆய்வுக் குழுவில் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் குறித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஆய்வுக் குழு இரு உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது.	வழிகாட்டுதல்களின் 3.3 (அ) மற்றும் (ஆ) அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அறிமுகப் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான ஆதன, இயந்திர உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் போது 02 கம்பெக்டர் வண்டிகளும் 02 கை உளவு இயந்திரங்களும் பயன்படுத்தப்படாதிருந்தன.	கம்பெக்டர் வண்டிகளும் முழுமையான மதிப்பீட்டு அறிக்கை பெறப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் கை உளவு இயந்திரங்கள் அகற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக.	சொத்துக்களில் இருந்து முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சொத்து முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 907,522,241 பெறுமதியான 31 காணிகளில் 29 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	10 காணிகளுக்கான பிரகடன உறுதிப் பத்திரங்களை எழுதி உறுதிப்படுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள காணிகளுக்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	சொத்துக்களின் உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	நகர சபைக்கு உரிமை மாற்றப்பட்ட காணிகளாக மீளாய்வாண்டின் போது அடையாளம் காணப்பட்ட 14 காணித் துண்டுகளின் உரிமையை உறுதிப்படுத்தவும், பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அவற்றின் உரிமையை உறுதிப் படுத்துவதற்கும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கும், நடவடிக்கை எடுக்கப்படுவதாக	உரிமையை உறுதிப் படுத்திக் கொள்வதற் கும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	சபையின் பெயரில் சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சபையின் பெயரில் வாகனங்களை கையகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	சபையின் பெயரில் வாகனங்களை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.